**செய்தி வெளியீடு எண் 298                                நாள் 22.4.2008**

## திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியம் வழங்குதல் குறித்த செய்திக் குறிப்பு

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின்கீழுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெறுகின்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.750/— வீதம் துறைநிலையிலான ஓய்வூதியம் வழங்கிடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்தி, ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் வழங்கும்படி உத்தரவிட்டதன் பேரில், இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாகப் பயன்பெறும் 109 பேருக்கு ஓய்வூதியம் மற்றும் நிலுவைத் தொகைக்கான மொத்தம் ரூ.11,63,250/—க்கான வங்கி வரைவோலைகளை 22.04.2008ம் தேதி அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கேஆர். பெரியகருப்பன் அவர்கள், சென்னையில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்த எளிய நிகழ்ச்சியில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர், திரு கோ. சந்தானம், இ.ஆ.ப., மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் திரு த.பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

*************

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9.